



பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 09 சனிக்கிழமை 25.07.2020 கதிர் 258


## இனி இது ரகசியம் அல்ல!

ஒரு சிலரின் தவறுகளால் – அல்லது பிழையான கருத்து நிலைப்பாட்டால் – தனி மனிதர்களின் வாழ்வு பாழ்பட்டுப் போய் விடுகின்றது என்பது உண்மைதான்.

பெரிதும் மதிக்கப்பட்ட மிருதங்க வித்துவான் கண்ணதாசனுக்கு நேர்ந்த விபரீதம் பக்கம்02

# பகிரங்க விவாதத்துக்கு

## சிறீகாந்தா அழைப்பு



(எஸ்.நிதர்ஷன்)

பாதுகாப்பு என்ற பெயரில் படைத் தரப்பினரின் பிரசன்னமின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ. சுமந்திரனைப் பகிரங்க விவாதத்துக்கு அழைத்துள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி என்.சிறிகாந்தா.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார். பக்கம் 10

## சுமந்திரன் ஏற்றார்



(நலோகதயாளன்)

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் என். சிறிகாந்தாவின் அழைப்பையும் சவாலையும் நிபந்தனைகளையும் அப்படியே ஏற்று எப்போது வேண்டுமானாலும் பகிரங்க விவாதத்துக்குத் தாம் தயார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்றிரவு காலைக்கதிருக்குத் தெரிவித்தார். பக்கம் 02




## விவாதம் பயனற்றது என்கின்றார் விக்கி!

(எஸ்.நிதர்ஷன்)

பகிரங்க விவாதத்துக்கு எங்களது கட்சி தயார் நிலையில் இருக்கின்றது. எனினும், அவ்வாறான விவாதம் தேவை யற்றது. அதில் எந்தப் பயனும் இல்லை.

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் அந்தக் கூட்டணியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

விக்னேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் நேற்று பக்கம் 02

## கொரோனாத் தொற்று 2,764 நேற்று 11 பேர் அடையாளம்

இலங்கையில் மேலும் 11 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. பக்கம் 02


## 'ஒருமித்த நாடு' வேண்டாம் என்கிறார் மஹிந்தர்

ஒருமித்த நாடு என்ற சொற்பதத்துக்குள் சமஷ்டி தீர்வை – தன்னாட்சி தீர்வை உருவாக்க முடியும். எதிரணிகளின் இந்தத் பக்கம் 02















## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதற்கு ஓர் உதாரணம்.

யுத்தத்தின் முடிவில் புனர்வாழ்வளிக்கப்பட்ட கண்ணதாசனுக்கு யுத்தகாலத்தில் நடந்ததாகக் கூறப்படும் ஒரு குற்றத்துக்காக மீண்டும் ஓர் ஆயுள்காலத் தண்டனை விதித்திருக்கின்றார் வவுனியா மேல் நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்தவர்.

இதில் வேடிக்கை என்னவென்றால், அவர் வழங்கிய தண்டனைத் தீர்ப்பை நியாயப்படுத்தவே முடியாது என்று சட்டமா அதிபர் தரப்பே வந்து மேன்முறையீட்டில் ஒப்புக்கொண்டமைதான்.

ஒருவருக்கு ஆயுள்தண்டனைத் தீர்ப்பளித்த நீதிபதி, அந்தத் தீர்ப்பை ஒரு இரண்டு வாசகங்களில் – வசனங்களில் – வழங்கியிருக்கின்றமை இன்னும் மிக மோசமான நடவடிக்கையாகும்.

தண்டனைத் தீர்ப்புக்குக் காரணமோ, விளக்கமோ கூடக் கட்டாமல் –

தமது தீர்மானத்துக்கான ஆதாரங்கள் பற்றி எதுவும் பேசாமல் –

ஒரே வசனத்தில் மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்திருக்கின்றமை மிக மிக சர்ச்சைக்குரிய விவகாரமாகும்.

மேன்முறையீட்டில் அவர் விடுவிக்கப்பட்டு விட்டார். ஆனால் இன்னும் சிறையிலிருந்து அவர் வெளியே வரவில்லை.

மேன்முறையீட்டுத் தீர்ப்பு உத்தரவு வவுனியா மேல் நீதிமன்றுக்கு வந்து –

பின்னர் கொழும்பில் ஆயுள் சிறைத் தண்டனையை அனுபவிக்கும் கண்ணதாசன் அங்கிருந்து வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்டு, அதன் பின்னர்தான் வவுனியா நீதிமன்றில் வைத்துத்தான அவர் விடுவிக்கப்பட வேண்டும்.

ஒரு வாரம் முதல் ஒரு மாதம் வரை அதற்குச் செல்லலாம் என்கின்றன நீதித்துறை வட்டாரங்கள். நம் நாட்டில் நீதித்துறையின் வேகம் அத்தகையது.

ஏற்கனவே ஒரு நீதிபதியின் பொறுப்பற்ற போக்கால் கண்ணதாசன் என்ற சிறந்த இசை நிபுணரின் மூன்றாண்டு வாழ்க்கை சிறைக்குள் அவமாயிற்று. அந்தத் தீர்ப்பு தவறு என்று மேனிலை நீதிமன்றம் முடிவு செய்த பின்னரும் கண்ணதாசன் வெளியே வருவதற்குக் காத்திருக்க வேண்டிய அவலம்.

இந்த மேன்முறையீட்டு வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் வாதம் சட்ட வட்டாரங்களினால் மெச்சப்பட்டது.

எழுத்து மூல சமர்ப்பணம் வரை இந்த மேன்முறையீட்டில் எதிர்த்துத் தாக்குப் பிடித்த சட்டமா அதிபர் திணைக்களம், இறுதியில் வழக்கிலிருந்து பின்வாங்கி, சுமந்திரனின் வாதத்தை ஏற்று இறங்கி வந்தது.

இன்னொரு வழக்கிலும் சுமந்திரனின் கை ஓங்கும் நிலைமை தென்படுகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் இறுதிக் கட்ட பிரசார சமயத்தில் – தேர்தல் பிரசாரம் ஓயும் வேளை – கொழும்பில் இரண்டு சிங்களப் பத்திரிகைகளிலும் ஓர் ஆங்கில பத்திரிகையிலும் சுமந்திரன் பிரசாரக் கூட்டத்தில் பேசினார் என்று குறிப்பிட்டு ஒரு தலைப்புச் செய்தி வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியது.

*"சிங்களவர்களைத் தோற்டிக்க வேண்டுமானால் சஜித்துக்கு வாக்களியுங்கள்!"* – என்று சுமந்திரன் மாங்குளத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசினார் என்பதே அந்தத் தலைப்புச் செய்தி.

அத்தவறான செய்திக்காக மேற்படி மூன்று பத்திரிகைகளுக்கும் சட்டத்தரணி நோட்டீஸ் அனுப்பிய சுமந்திரன் இப்போது ஒவ்வொரு நிறுவனத்திடமும் ஆயிரம் கோடி ரூபா நஷ்ட ஈடு கேட்டு வழக்குத் தொடர்ந்திருக்கின்றார்.

இவ்வளவு காலமும் இது குறித்து அலட்டிக் கொள்ளாமல் இருந்த மூன்று நிறுவனங்களும் இப்போது பிரமுகர்கள் மூலம் சமாதானத்தூது விடத் தொடங்கியிருக்கின்றன என்று தகவல்.

*"செய்த தவறுக்காகப் பத்திரிகையில் பகிரங்க மன்னிப்புக் கோருகின்றோம். விடயத்தை இத்துடன் சுமுகமாக முடித்தால் என்ன?"* – என்பதுதான் சமரசத் தூது.

நீதிமன்றத்தில் சமரசம் செய்யலாம் என்ற சாரப்பட சுமந்திரன் தரப்பில் பதில் சென்றிருப்பதாகத் தகவல்.

இதே சமயம், தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட முன்னாள் தலைவி விமலேஸ்வரிக்கு எதிராக ஆயிரம் கோடி ரூபா நஷ்ட ஈடு கேட்டுத் தாக்கலாகும் வழக்குத் தொடர்பில் ஆவணங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன எனவும் தெரிகின்றது. தேர்தல் வாக்களிப்புக்கு முன்னர் வழக்குத் தாக்கலாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பாவம் விமலேஸ்வரி.

கயிறு கொடுத்து, 'வைன்' பண்ணி, ஏற்றி விட்டவர்கள் இன்னொரு தடவை பஜரோ லைசென்ஸை விற்றுக் கோடிக்கு மேல் சுருட்டிக் கொள்ளப் போகின்றார்கள். அம்மணிதான் நீதிமன்றத்துக்கும் வீட்டுக்கும் அலையப் போகின்றார் போலும்.

–மின்னல் –

---

## பகிரங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகிரங்க விவாதம் தொடர்பில் ஏற்கனவே சவாலுக்கு இருவரும் இணங்கிய நிலையில் அதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனம் இணக்கத்தைத் தெரிவித்துள்ளது.

இதனால் கட்சி சார்பில் இருவர் எனில்,தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சார்பில் தானும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் வருகின்றோம் என்று சிறிகாந்தா தெரிவித்திருந்தார்.

அதற்கு குறித்த தனியார் தொலைக்காட்சி இணங்கினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தான் இன்னுமோர் வேட்பாளர் சகிதம் விவாதத்தில் பங்குகொள்ளத் தயாராகவே இருக்கின்றார் என்று சுமந்திரன் தெரிவித்தார்.

கட்சி சார்பில் இருவர் பங்குகொள்ள முடியாது ஒருவர் என்றாலும் தான் மட்டும் விவாதத்துக்குத் தயாராகவே உள்ளார் என்றும் சுமந்திரன் கூறினார்.

எத்தனை பேர் என்றாலும் குறித்த விவாதத்த்தை ஓரிரு நாட்களுக்குள் விரைவாகவே நடத்தத் தாம் விரும்புகின்றார் எனவும் சுமந்திரன் மேலும் குறிப்பிட்டார்.

---

## 'ஒருமித்த நாடு'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திருட்டுத்தனம் பற்றி நாம் மிகவும் அவதானமாக இருக்கின்றோம். அதனாலேயே ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு. இந்தச் சொற்பதத்தில் மாற்றத்தை ஏற்படுத்த மாட்டோம். சம்பந்தன் அணியினரும் சஜித் அணியினரும் கூறும் 'ஒருமித்த நாடு' என்ற சொற்பத்தை ஏற்கவேமாட்டோம். ஏனெனில் ஒருமித்த நாடு என்ற சொற்பதத்துக்குள் சமஷ்டி தீர்வை – தன்னாட்சி தீர்வை உருவாக்க முடியும். எதிரணிகளின் இந்தத் திருட்டுத்தனம் பற்றி நாம் மிகவும் அவதானமாக இருக்கின்றோம். அதனாலேயே ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

சொற்பதங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியாவது இலக்கை அடைய வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடாப்பிடியாக உள்ளனர். அதுதான் அவர்கள் ஒருமித்த நாடு என்ற சொற்பதத்தைத் தூக்கிப்பிடித்துக்கொண்டிருக்கின்றார்கள். இதற்கு சஜித் அணியினரும் ஒத்தாசை புரிகின்றார்கள்.

உயர்நீதிமன்றம் முன்னர் வழங்கிய தீர்ப்பைக் காரணம் காட்டி நாட்டைப் பிளவுபடுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் – என்றார்.

# இனவாதிகளின் கொட்டத்தை அடக்க கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும்

### யாழ்.மாவட்ட வேட்பாளர் சரவணபவன் கோரிக்கை



இனவாதம் இந்த நாட்டில் இருக்கும் வரையில், இலங்கையின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் இனவாதிகள் தீர்மானிக்கும் வரையில், இலங்கைக்கு விமோசனமில்லை. இனவாதிகளின் கரங்களை ஒடுக்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் பலப்படுத்த வேண்டும்.

– இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

கறுப்பு ஜூலை இனக்கலவரமானது மிகவும் கொடியது. தமிழர் நெஞ்சங்களில் இன்னும் ஆறாத வடுவாக உள்ளது. அது இடம்பெற்று 37 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் அதுதந்த காயங்கள் எம்மவர்களின் நெஞ்சங்களைவிட்டு இன்னும் அகலவில்லை. இந்த நிலையில் தேசிய பௌத்த புத்திஜீவிகள் சங்க சபையின் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தேசத்தைக் காத்த இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலுக்குப் பதில் தாக்குதலாக தமிழ் மக்கள் மீது சிங்கள மக்கள் கைவைக்க வேண்டிவந்தது தமிழர்கள் வன்முறையை நாடினால் வன்முறைதான் பதில் என்பதற்குக் கறுப்பு ஜூலை சான்று என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடந்த காலமும், நிகழ்காலமும், எதிர்காலமும் இத்தகைய தேரர்களாலேயே தீர்மானிக்கப்பட்டது, தீர்மானிக்கப்படுகின்றது, தீர்மானிக்கப்படும். தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு அப்பாவித் தமிழர்களை அரக்கத்தனமாக கொன்றொழித்தமை பெருமை பேசும் விடயம் அல்ல.

போர் முடிவுற்ற பின்னர் இன்று தேசியக் கட்சிகள் பலவும் நல்லிணக்கம் என்று வெளிச்சாயம் பூசிக்கொண்டிருக்கை யில் இத்தகையவர்களின் கருத்துக்கள் இந்த அரசு இன நல்லிணக்கத்தை எந்த வகையில் பார்க்கின்றது என்பதை ஆழமாகப் புடம்போட்டுக் காட்டுகின்றன.

இத்தகையவர்களின் நிகழ்சி நிரலுக்கு ஏற்ப இயங்கவும், அவர்களின் ஊதுகுழலாகவும் அடிவருடிகளாகவும் செயற்படுவதற்கு இங்கு பல எட்டப்பர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். தேசிய கட்சிகளின் சின்னங்களில் களமிறங்கினால் தமக்குத் தோல்வி கிட்டும் என்று உணர்ந்த அவர்கள் சுயேச்சைகளாகக் களமிறக்கி விடப்பட்டுள்ளனர். அவர்களைத் தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டுள்ள தேசிய கட்சிகளின் வேட்பாளர்களும் தற்போது தம்மை தமிழர்களின் இரட்சகர்கள் போன்று காட்டிக்கொள்ள ஆரம்பித்து விட்டனர். தமிழ் மக்கள் இந்த விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும் – என்றுள்ளது.

# வெளிநாடுகளில் சிக்கியுள்ள மக்களை அழைத்துவருவதற்கு உடன் நடவடிக்கை

### — சம்பிக்க வலியுறுத்து

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்குண்டுள்ள உழைக்கும் மக்களை அழைத்துவருவதற்காக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் அனைவரையும் நாட்டுக்குள் அழைத்துவரும் வரையில் நாங்கள் போராட்டங்களை முன்னெடுப்போம்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருமாறு கோரி வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துக்கு முன்பாக நேற்று ஐக்கிய மக்கள் சக்தியினரால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

---

## கொரோனாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐக்கிய இராச்சியத்தில் இருந்து தந்த ஒருவருக்கும், கந்தக்காடு போதைப்பொருள் தடுப்பு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 9 கைதிகளுக்கும் மற்றும் கந்தகாடு தொற்றாளர் ஒருவருடன் தொடர்பைப் பேணிய ஒருவருக்கும் நேற்று கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 764 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 2 ஆயிரத்து 94 பேர் குணமடைந்துள்ளனர். 659 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, 63 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் கொரோனாத் தொற்றால் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

---

## விவாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடகங்களைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன்போது பகிரங்க விவாதம் குறித்து எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலையே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நேரடி விவாதத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்ட பின்னர் உடனடியாகவே எமது கட்சியின் வேட்பாளர் சிறீகாந்தா தான் விவாதம் செய்யத் தயார் என்று கூறியுள்ளார்.

"என்னைப் பொறுத்தவரையில் வாதிட்டுக்கொண்டிருப்பது என்பது தேவையற்ற விடயம். மக்களுக்கு நாங்கள் செய்ய வேண்டிய நன்மைகளைச் செய்ய வேண்டுமே தவிர, தேவையில்லாமல் இருந்து விவாதித்துக் கொண்டிருப்பதால் அல்லது பேசிக் கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை.

அறிவில் இருந்து கொண்டு விளையாட்டுக்களை விளையாடுபவர்களுக்கு நல் லது. மக்களுக்கு என்ன நன்மை என்றுதான் பார்க்க வேண்டும். சுமந்திரன் சவால் விட்டதால் எமது சார்பில் சிறிகாந்தா விவாதத்துக்குத் தயாராகவே உள்ளார் – என்றார்.

# மக்களை ஏமாற்றும் அரசை வீட்டுக்கு விரட்டியடிப்போம்

## பரப்புரைக் கூட்டத்தில் சஜித் சூளுரை



வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் நாட்டு மக்களை ஏமாற்றி வரும் அரசை ஆகஸ்ட் 5ஆம் திகதி வீட்டுக்கு விரட்டியடித்து, ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஆட்சியை மலரச் செய்வதற்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நம்புகின்றோம்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்தும் விதத்தில் நாவலப்பிட்டியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பெருந்தொட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுக்கொடுக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு உறுதியளித்திருந்தது. அந்தத் தொகை கிடைத்து விட்டதா? இல்லை. இவ்வாறுதான் இந்த அரசு மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றது. எமது ஆட்சியின்கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. அந்த உறுதிமொழியை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

அதேபோல் மக்களுக்கு மாதாந்தம் 20 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கான பொருளாதாரத்திட்டமும் எம்மிடம் உள்ளது. ஆட்சிக்கு வந்து 24 மணிநேரத்துக்குள் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்படும். உலக சந்தையின் எரிபொருள்களின் விலைகள் குறைந்தும், இந்த அரசு அதன் நன்மையை நாட்டு மக்களுக்கு வழங்கவில்லை.

சமுர்த்திப் பயனாளிகளுக்கான கொடுப்பனவிலும் கைவைத்துள்ள இந்த அரசு, மின்கட்டணம் தொடர்பிலும் போலியான அறிவிப்புகளை விடுத்து வருகின்றது. மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான மின்கட்டணம் இல்லாது செய்யப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால், அறவிடப்பட்டுள்ளது. மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான மின்கட்டணத்தைச் செலுத்தியவர்களுக்கு எமது ஆட்சியின்கீழ் அந்தக் கொடுப்பனவு மீள வழங்கப்படும் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

நாட்டு மக்களைப் பல வழிகளிலும் ஏமாற்றிவரும் இந்த அரசு அடுத்துவரும் நாள்களில் அரச ஊழியர்களின் சம்பளத்தைக்கூடக் குறைக்கலாம். மேலும் சிலரை வீட்டுக்கு அனுப்பலாம். இவை தடுக்கப்படவேண்டும். அப்படியானால் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஆட்சி மலரவேண்டும்.

தொலைபேசி வெற்றிபெறும். கண்டி மாவட்டத்திலும் வெற்றி உறுதி. நான் பிரதமராவேன். அதன்பின்னர் அப்பகுதிகளுக்கு வருவேன் - என்றார்.

கண்டி மாவட்டத்திலுள்ள பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்கிவரும் வேலுகுமாரின் வெற்றியையும் மக்கள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இதன்போது சஜித் கோரிக்கை விடுத்தார்.

## சர்ச்சைக்குரிய தேர்தல் அதிகாரி ஓய்வின் பின் இங்கு ஏன் பணிக்கு?

### இப்படிக் கேட்கின்றார் நீதியரசர் விக்கி

- எஸ்.நிதர்ஷன் -

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் குழப்பங்கள், பிரச்சினைகள் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் அந்தத் தேர்தலுக்கு யாழில் பொறுப்பாக இருந்த அதிகாரி தற்போது இளைப்பாறிய நிலையில் மீண்டும் அவரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய அவசியம் என்ன என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் வேட்பாளருமான நீதியரசர் சீ.வீ.விக்கினேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழிலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று மாலை ஊடகங்களைச் சந்தித்துக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2015 ஆம் ஆண்டு யாழ். தேர்தல் மாவட்டத்தில் நடந்த தேர்தல் தொடர்பில் சில பிரச்சினைகள் உள்ளன என என்னிடத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக தேர்தல் முடிவுகள் முழுநாளும் தாமதித்து மறுநாள் பிற்பகலே வெளியிடப்பட்டன.

(10ஆம் பக்கம் பார்க்க)



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# விக்கி மீதான அழுத்தம்

**தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட வேட்பாளருமான நீதியரசர் சி. வீ. விக்னேஸ்வரன் நேற்றுப் பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்ட விடயம் ஒரு சிறு விசாரிப்பு என்று விட்டுவிடக் கூடிய விவகாரம் அல்ல.**

**ஏனென்றால் நீதியசரர் விக்னேஸ்வரனிடம் கேள்வி எழுப்பப்பட்ட விடயம் ஆழமானது. அதற்குள் அர்த்தங்கள் பொதிந்து கிடக்கின்றன.**

**கொழும்புத் தலைமையகப் பொலிஸில் இருந்து விசேடமாகப் பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.**

**இலங்கையின் சரித்திரம் குறித்தும், அதில் தமிழர்களின் முக்கிய வகிபாகம் குறித்தும் நீதியரசர் தெரிவித்த ஒரு கருத்துக் குறித்தே விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.**

**சிங்களவர்களுக்குத் தவறான வரலாறு போதிக்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ள நீதியரசர் விக்னேஸ்வரன், இலங்கைத் தமிழர்களுக்கும் பௌத்தத்துக்கும் உள்ள தொடர்பை விவரித்திருக்கின்றார்.**

***"சரித்திர காலத்துக்கு முன்பிருந்தே வடக்கும் கிழக்கும் தமிழர்களின் வாழ்விடம். பௌத்தத்தை முதன் முதலில் தமிழர்களே ஏற்றிருந்தனர். அப்போது சிங்கள மொழி வழக்கத்திற்கே வந்திருக்கவில்லை.***

***"சிங்கள மொழி கி.பி. 6ஆம், 7ஆம் நூற்றாண்டுகளில்தான் மொழியாகப் பரிணமித்தது. அதற்கு முன்பிருந்தே இலங்கைத் தீவில் தமிழினமும் மொழியும் நிலை கொண்டிருந்தன."***

**– இந்தச் சாரப்பட தாம் எழுதிய கேள்வி – பதில் அறிக்கை குறித்தே நீதியரசர் விக்னேஸ்வரன் விசாரிக்கப்பட்டிருக்கின்றார்.**

**ஆக, அந்த அறிக்கை அவர் வெளியிட்டதுதானா என்ற உண்மைத் தன்மை குறித்த பூர்வாங்க விசாரணையே இப்போது நடந்திருக்கின்றது.**

**கிழக்கில் தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பதற்கானது என்ற பெயரில் தனியான ஜனாதிபதி செயலணி ஒன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையில் அமைக்கப்பட்டபோதே, பலவித முன்னெச்சரிக்கை அறிவிப்புகள் வெளியாகின என்பது தெரிந்ததே.**

**கிழக்கில் தமிழர்களின் பூர்வீகக் கிராமங்கள் சிங்கள, பௌத்த புராதன தலங்களாகக் காட்டப்பட்டு கபளீகரம் செய்யப்படும் – அல்லது ஆக்கிரமிக்கப்படும் – என்று பல தரப்பாலும் எச்சரிக்கப்பட்டது.**

**தமிழர் தாயகத்தை பௌத்த, சிங்களப் பேரினவாதம் சூறையாடுவதற்கான ஒரு திறவுகோலே இந்த விசேட ஜனாதிபதி செயலணி என்று தமிழர் தரப்பில் ஊகம் தெரிவிக்கப்பட்டது.**

**தமிழர் தாயகத்தை பௌத்த, சிங்கள புராதன மையங்களாக மாற்றும் நரித் தந்திரத் திட்டத்துக்கு ஆப்படிக்கும் விதத்தில் நீதியரசர் விக்னேஸ்வரன் வெளியிட்ட கருத்து அமைந்ததாலேயே அவருக்கு எதிரான இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.**

**தமிழர் பிரதேசங்களில் பௌத்த சின்னங்களைப் புராதன அடையாளங்களாக மீட்பதன் மூலம் அப்பிரதேசங்களை பௌத்த, சிங்கள இடங்கள் என்று காட்டலாம் என்பதுதான் கொழும்பின் திட்டம்.**

**ஆனால், சிங்களம் ஒரு மொழியாகப் பரிணமிக்க முன்னரே இந்த மண்ணில் தமிழர்கள் பௌத்தத்தையும் ஒரு மதமாக ஏற்று, அதைக் கைக்கொண்டிருந்தனர் என்ற நீதியரசரின் கூற்று ஏற்று அங்கீகரிக்கப்படுமானால் –**

**தமிழர் தாயகத்தில் கண்டுபிடிக்கப்படக் கூடிய – அல்லது மீட்கப்படக்கூடிய – பௌத்த சின்னங்கள், மரபுரிமைச்சான்றுகள், தொன்மைப் பொருள்களின் மீது சிங்களம் தனி உரிமையோ, தனிப் பாத்தியமோ கொண்டாடமுடியாது என்ற நிலைமை ஏற்பட்டுவிடும்.**

**அதனால்தான் நீதியரசர் விக்னேஸ்வரன் மீது கொழும்பின் சீற்றம் திரும்பியிருக்கின்றது போலும்.**

**இப்படி உண்மையைப் பட்டவர்த்தனமாகக் கூறியதன் மூலம், தமிழர் தேசத்தை சிங்கள, பௌத்தத்தின் புராதன இடங்களாகக் காட்ட முயன்ற பேரினவாத மேலாதிக்கத்தின் முயற்சிக்கு ஆப்பு வைத்த நீதியரசரின் நடவடிக்கையை, தேசிய இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வின்மையையும், முரண்பாட்டையும், குழப்பத்தையும், சர்ச்சையையும் ஏற்படுத்தும் முயற்சியாக அர்த்தம் பண்ணி அதன் பேரில் அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு கோட்டாபய அரசு தயாராகக் கூடும்.**

***"மிரட்டிப் பணிய வைக்கலாம் என்று எண்ணினால், தயவு செய்து உங்களின் எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள் என ஜனாதிபதியையும் மற்றைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறான செயல்களை எதிர்நோக்க வேண்டி வரும் எனத் தெரிந்து கொண்டுதான் அரசியலுக்குள் நுழைந்தேன்"* – எனக் கூறுகின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.**

**சரித்திர உண்மைக்காக அவர் உறுதியாக நின்றால் தமிழினம் அவருடன் நிற்கும்.**

# எங்களைப் பயமுறுத்தி அரசு அடிபணிய வைக்க முடியாது!

## நீதியரசர் விக்கினேஸ்வரன் உறுதி

– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம், ஜூலை 25



தேர்தல் காலத்தில் எங்களை பயமுறுத்துவதற்காக அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுக்கிறது. ஆவ்வாறான விசாரணைகளினூடாக எங்களை அச்சப்பட வைக்கலாமென்று அரசு கருதுமாக இருந்தால் அது பயனற்றது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் வேட்பாளருமான சீ. வீ. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழிலுள்ள தமது கட்சி அலுவலகத்தில் நேற்று மாலை ஊடகங்களைச் சந்தித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது –

பொலிஸ் தலைமையகத்தில் இருந்து என்னிடத்தில் சில கேள்விகயை கேட்பதற்கு பொலிஸாரை அனுப்பியருந்தார்கள். அண்மையில் நடந்த விடயம் என்றால் பரவாயில்லை. அதாவது சென்ற வருடம் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி நான் வெளியிட்ட ஊடக அறிக்கை தொடர்பிலேயே பொலிஸார் விசாரணைக்கு வந்தார்கள்.

சிங்கள தொலைக்காட்சி ஒன்று நான் வெளியிட்ட ஆங்கில அறிக்கையினை பின்னணியில் காண்பித்து அதற்கு முன்னிலையில் இவ்வாறான கருத்துக்களை கூறுபவர்கள் இந்த நாட்டில் சமூகத்திற்கு, இனங்களுக்கு இடையில் பிரச்சினைகளை அல்லது கலவரத்தை ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொள்ளுகின்றார்கள் என்று கூறியிருந்தார்கள்.

இது தொடர்பிலேயே என்னிடத்தில் விசாரணை நடந்தது. அவ்வாறான ஓர் ஊடக அறிக்கையினை நீங்கள் வெளியிட்டீர்களா என்று கேட்டார்கள். உடனே என்னுடைய அலுவலக அதிகாரிகளை தொடர்பு கொண்டு கேட்ட போது அவ்வாறான ஊடக அறிக்கையை நான் வெளியிட்டேன் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தைப் பார்க்கும்போதுதான் பொலிஸார் ஏன் விசாரணைக்கு வந்தார்கள் என்பதன் உட்பதம் எனக்கு புரிந்தது. குறிப்பாக அந்த அறிக்கையில் இலங்கையினுடைய மூத்த குடிகள் தமிழர்கள் என்றும், சிங்கள மக்கள் மத்தியில் பிழையான வரலாற்றினை பௌத்த பிக்குகள் சொல்லி வருகின்றார்கள் என்றும், இவ்வாறான பிழையான கருத்துக்கள் களையப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த ஊடக அறிக்கையின் பிரதியை பொலிஸாருக்கு கொடுத்திருந்தேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்திற்குமான முழு பொறுப்பினையும் ஏற்றுக் கொள்ளுகின்றேன். கேள்விகள் இருந்தால் கேளுங்கள் என்று கூறினேன். அதற்கு அந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் தாங்கள் இது தொடர்பில் மேலதிகாரிகளிடம் பேசிய பின்னர் மேலதி விசாரணைக்கு உங்களிடம் வருவதாக கூறி இங்கிருந்து புறப்பட்டனர்.

இதன் போது என்னுடைய பாதுகாப்பு பொலிஸார் தேர்தல் நேரத்தில் , இவ்வறான விசாரணைகளை நடத்த வேண்டாம் என்றும், தேர்தலின் பின்னர் விசாரணை நடத்துமாறு கோரினர். இதற்கு அந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் சம்மதம் தெரிவித்துச் சென்றனர்.

இந்த விசாரணையில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் உள்ளது. இளைப்பாறிய உச்ச நீதிமன்ற நீதியரசரைக் கேள்விகள் கேட்க வேண்டும் என்றால் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் உள்ள பொலிஸ் அதிகாரியே வர வேண்டும். ஆனால் என்னிடத்தில் விசாரணை செய்ய வந்தவர் முதல் அலுவலக தரத்தில் உள்ள பொலிஸ் உத்தியோகஸ்தரே. இது பிழையான விடயம்.

மேலும் இந்தத் தருணத்தில் நேரடியாக வந்து விசாரணை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தொலைபேசி ஊடாகவே இந்த விசாரணைகளை செய்திருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யாமல் நேரடியாக வந்து விசாரணை செய்தமை என்பது எமக்கு தேர்தலுக்கு முன்னர் பயமுறுத்தும் செயற்பாடுபோல் தோண்றுகின்றது.

ஆனால் இந்த விசாரணை எனக்கு வெற்றி என்றுதான் கூற வேண்டும். சிங்கள மக்கள் மத்தியில் உள்ள பிழையான கருத்துக்களை களைந்து அவர்களுக்குத் தெளிவாக உண்மையான வரலாற்றை கூற வேண்டும். எதிர்காலத்தில் எமக்கான தீர்வு கிடைக்க வேண்டுமாகா இருந்தால் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இவ்வாறான பிழையான கருத்துக்கள் களையப்பட வேண்டும்.

நான் வெளியிட்ட ஊடக அறிக்கை அவர்களுடைய மனதை உறுதித்தியிருந்தது என்றுதான் அர்த்தப்படுகின்றது. பயமுறுத்துவதற்கான இவ்வாறான விசாரணைகளை அரசு முன்னெடுக்குமாக இருந்தால், அது பயனற்றது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது இராணுவம் அனைத்து இடங்களிலும் உள்ளது. எல்லா விதத்திலும் தமிழ் மக்களை பயமுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தான் நான் காண்கின்றேன். சிலதினங்களிற்கு முன்னர் திருகோணமலையில் இருந்து நான் யாழ்ப்பாணம் வரும்போது கிட்டத்தட்ட 20 இடங்களில் இராணுவம் எங்களை வழிமறித்துச் சோதனை செய்ய முனைத்தார்கள்.

இருப்பினும் எனக்கு பொலிஸ் பாதுகாப்பு இருந்தமையால் எனக்கு இடைஞ்சல்கள் செய்யவில்லை. ஆனால் ஒரு பொது மகன் இவ்வாறு பிரயாணம் செய்ய வேண்டுமானால் இராணுவத்தால் எத்தனை தடைகளை எதிர்கொள்ள வேண்டும். இவ்வாறான அதிகரித்த இராணுவ சோதனைச் சாவடிகளால் மக்கள் பீதியடையக்கூடும்.

இராணுவத்தின் இவ்வாறான சோதனைகள் மற்றும் நடமாட்டம் மக்களை வாக்களிக்க செல்லாது தடுக்குமாக இருந்தால், அது மிகப் பெரிய ஜனநாயகத்திற்கு எதிரான ஒரு செயலாகும். தமிழ் மக்களை அனைத்து வகையில் பயம் கொள்ள வைக்கும் சூழலை அரசாங்கம் ஏற்படுத்தி வருகின்றது. தேர்தல் காலத்தில் அரசாங்கம் எங்களை அச்சப்பட வைக்க அரசாங்கம் நினைக்ககூடும்.

இவ்வாறான விசாரணைகள் நடக்கும் போது, வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்கு செல்வதற்குத் தயக்கம் கொள்ளக் கூடும். இதனால் நாங்கள் சில பின்னடைவுகளை எதிர்கொள்ள கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

# போராட்டங்களே வாழ்வாகிவிட்டது

## ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு



மன்னார், ஜூலை 24

'போராட்ட காலத்திலேதான் எனது அரசியல் வாழ்வு ஆரம்பிக்கப்பட்டது. எனினும், போராட்டங்களாகவே எனது அரசியல் வாழ்வு மாறிவிட்டது' என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வன்னி மாவட்டத்தில், ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, நகர சபைத் தலைவர் நஹூஸீன் தலைமையில், மன்னார், உப்புக்குளத்தில் நேற்று மாலை இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்று, உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய முன்னாள் அமைச்சர் ரிஷாத் -

19 வருட அரசியல் பயணத்தில், எல் லாக் காலமும் போராட்டத்துடனேயே நீச்சலடித்து வருகிறேன். உங்கள் ஊரான உப்புக்குளத்தில் ஓர் ஆர்ப்பாட்டம் நடந்த போது, அது முடிந்த பின்னரேயே கொழும்பிலிருந்து நான் இங்கு வந்தேன். என்னுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், ஹுனைஸ் பாரூக்கும் வந்திருந்தார். பிரச்சினைகள் முடிந்த பின்னர், நாம் இங்கு வந்த போதும், நடந்த அனைத்துப் பிரச்சினைகளையும் என் தலையில் கட்டி, நீதிமன்றப் படிக்கட்டுக்களை ஏற வைத்தார்கள். அங்கு கைகட்டி நிற்கும் நிலையை ஏற்படுத்தினார்கள் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள் - என்றார்.

# விக்கியை துருவியது சி.ஐ.டி.!

## யாழ். இல்லத்தில் இரண்டு மணிநேரம் கேள்வி - பதில் அறிக்கை குறித்து விசாரணை

கொழும்பு, ஜூலை 24

குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசேட அதிகாரிகள் குழுவொன்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரனிடம் இரண்டு மணி நேரம் கடும் விசாரணை நடத்தியுள்ளது. கொழும்பிலுள்ள உயர் அதிகாரிகளின் உத்தரவையடுத்தே இந்த விசாரணை இடம் பெற்றது எனத் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர் கோயில் வீதியிலுள்ள முன்னாள் முதலமைச்சரின் இல்லத்துக்கு இன்று காலை திடீரெனச் சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் தலைமையிலான விசேட சி.ஐ.டி. குழுவினரே இந்த விசாரணையை நடத்தியுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் விக்னேஸ் வரனால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று தொடர்பாகவே இந்த விசாரணை அமைந்திருந்தது.

கேள்வி - பதில் வடிவில் அந்த அறிக்கை வெளியாகியிருந்தது. குறிப்பிட்ட அறிக்கை சிங்கள இணையத்தளம் ஒன்றில் வெளியாகியிருந்தது. இனங்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் அந்த அறிக்கை அமைந்திருந்தது எனவும் குறிப்பிட்ட சிங்கள இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

விக்னேஸ்வரனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானவையா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்துமாறு விசாரணைக்காக வந்திருந்த விசேட சி.ஐ.டி. குழுவுக்கு உயர்மட்டம் உத்தரவிட்டிருந்தது. இது தொடர்பாக விக்னேஸ் வரனிடம் குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரி கேள்வி எழுப்பினார்.

உடனடியாகவே இது தொடர்பான ஆவணத்தைக் கையளித்த விக்னேஸ்வரன், அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் தான் உறுதியாக இருக்கின்றார் எனவும் கூறினார்.

இது தொடர்பில் விக்னேஸ்வரன் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் மேலிடத்துக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்த பொலிஸ் அதிகாரி, தேவை ஏற்பட்டால் தேர்த லுக்குப் பின்னர் மீண்டும் வருவோம் எனவும் தெரிவித்துச் சென்றுள்ளார்.

# மீனவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஊர்காவற்றுறை கடற்பரப்பில் மீன் பிடிக்கச் சென்று கடலில் தவறி வீழ்ந்த மீனவரின் சடலம் காங்கேசன் துறைக் கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

ஊர்காவற்றுறை கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்காகச் சென்ற 72 வயதுடைய மீனவர் கடலில் தவறி வீழ்ந்துள்ளார். இந்நிலையில் சக மீனவர்கள், கடற் படையினர் இரண்டு நாள்களாகக் கடலில் தொடர்ந்து தேடியபோதிலும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்நிலையில் நேற்று காலை காங்கேசன்துறை கடற்கரையில் வயோதிபரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# தாய், தந்தை விபத்தில் பலி 2 பிள்ளைகள் படுகாயம்

யக்கல, கிரிந்திவெல வீதியில் மோட்டார் வாகனமொன்று மின்கம்பத்தில் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று (23) இரவு 11.30 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

மோட்டார் வாகனத்தின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் அது மின் கம்பத்தில் மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பதுளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்கு சென்று விட்டு மீண்டும் திரும்பிய நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளமையுடன், இரண்டு பிள்ளைகள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரும் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நல்லூர்க் கந்தனுக்கு கொடிச்சீலை வந்தது



யாழ்ப்பாணம், ஜூலை 24

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் சம்பிரதாய பூர்வமாக கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு இன்று இடம்பெற்றது.

செங்குந்தர்பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது வழக்கமாகும்.

அதன்படி யாழ் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை சிறிய ரதத்தின் மூலம் பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு காலை 9.30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை அடைந்தது.

அங்கு ஆலயத்தின் வெளி வீதி உலா சென்று சுபநேரத்தில் பூசைகள் இடம்பெற்று கொடிச்சீலை நல்லூர் ஆலயப் பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

நாளை காலை 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவ பெருவிழா தொடர்ந்து 25 நாள்கள் இடம்பெறவுள்ளது.

# ஜனநாயக போராளிகள் கட்சி கூட்டமைப்புக்கு முழு ஆதரவு!

## சம்பந்தனுடனான சந்திப்பில் முடிவு

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**



திருகோணமலை, ஜூலை25

ஜனநாயக போராளிகள் கட்சியினர் தமது மத்திய குழுவின் தீர்மானத்திற்கு அமைய தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குத் தமது பூரண ஆதரவினை எதிர்வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் திருகோணமலையில் உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தநின் இல்லத்தில் சம்பந்தனுக்கும் ஜனநாயக போராளிகள் கட்சியினருக்கும் இடையே நடைபெற்ற ஒரு கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

அங்கு இரா.சம்பந்தன் கருத்து தெரிவிக்கையில் -

எதிர்வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலும் ஜனநாயகப் போராளிகள் கட்சி தமது ஆதரவை எமக்கு வழங்கவுள்ளார்கள். நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பிறகும் நாம் இணைந்து செயற்பட இருக்கின்றோம். தமிழ் மக்களுடைய தீர்வுக்காக எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாக நாம் திறந்த மனதுடன் பேசவுள்ளோம்.

இவர்கள் எமக்கு ஆதரவு வழங்குகின்றனர். அவர்கள் எமது போராளிகள் என்பதன் அடிப்படையில் நாம் அவர்களை வரவேற்கின்றோம். ஒருமித்த நாட்டுக்குள், பிரிபடாத நாட்டுக்குள், எமது மக்கள் கௌரவமாக, சுதந்திரமாக, சமத்துவமாக வாழவேண்டும் என்ற நோக்கிலேயே நாம் செயற்படுவோம். - என்றார்.

இக்கலந்துரையாடல் தொடர்பாக ஜனநாயக கட்சியின் செயலாளர் கதிர் கருத்து தெரிவிக்கையில்-

ஜனநாயகப் போராளிகள் கட்சியினரான நாம் தமிழ்த் தேசியம் தொடர்பாக சம்பந்தன் ஐயாவுடன் பல விடயங்களை பேசினோம். எதிர்காலத்தில் எவ்வாறு எமது தமிழ் தேசியத்தை பலப்படுத்துவது என்பது தொடர்பாக ஐயாவோடு பேசியுள்ளோம் .

முன்னாள் போராளிகள் தொடர்ச்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பயணிப்பதாக தெரிவித்துள்ளோம். தமிழர்களுடைய உரிமையைப் பெறுவதற்கு எவ்வாறு நாம் ஜனநாயக ரீதியாக உறுதியாகவும் நிதானமாகவும் பயணித்து வருகின்றோம் என்பதை ஐயா எமக்கு தெளிவாக கூறியிருந்தார்.

ஐயாவுடைய எண்ணமும் மன உறுதியும் தமிழ் மக்களுக்கான நிரந்தரமான சுதந்திரத்தைப் பெற்றுத் தரும் என்பதனை இந்த இடத்தில் உறுதியாக கூறிக் கொள்ள விரும்புகின்றோம். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி மாவட்டத்தில் ஓர் அரசியல்வாதிக்கு ஆதரவாகச் செயற்பட அதிகாரிகள் சிலர் முடிவு?

## தெரிவத்தாட்சி அலுவலருக்கு முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை 25

கிளிநொச்சி மாவட்டத்தில் ஓர் அரசியல்வாதிக்கு ஆதரவாகச் செயல்படுவதாக முடிவெடுத்த அரச அதிகாரிகள் அனைவரதும் தேர்தல் பணியை இரத்துச் செய்யுமாறு கோரி தெரிவத்தாட்சி அலுவலரிடம் முறையிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் ஓய்வு பெற்ற அதிகாரிகள் சிலருடன் இணைந்து தற்போதும் பணியில் உள்ள அதிகாரிகள் சிலருமாக கிளிநொச்சி நகரின் மத்தியில் உள்ள வர்த்தக நிலையக் கட்டடம் ஒன்றில் 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அரசியல் செயல்பாடு குறித்துப் பேசியுள்ளனர்.

ஓர் அரசியல்வாதியின் வெற்றிக்காகச் செயல்படுவதென அங்கு முடிவெடுக்கப்பட்டதாக அக்கூட்டத்தில் கலந்துகொண்ட ஓய்வுநிலை அதிகாரி ஒருவர் பின்னர் அந்த வேட்பாளரின் பிரசாரத்துக்காக நடந்த கூட்டத்தில் பகிரங்க மேடையில் அறிவித்தார்.

அது மட்டுமல்லாமல், தங்களின் முதல் கூட்டத்தில் பங்குபற்றிய அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் சிலரின் பெயர்களையும் அவர் அங்கு குறிப்பிட்டு உரையாற்றியுள்ளார்.

இவ்வாறு கூறப்பட்ட பெயர்களில் பலர் தற்போதும் பணியில் உள்ள அதிகாரிகள் என்பதோடு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் பணிக்கு விண்ணப்பித்தவர்களாகவும் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்த விடயம் உடனடியாக மாவட்டத் தேர்தல் தெரிவத் தாட்சி அலுவலர் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# சர்ச்சைக்குரிய அந்த அதிகாரிகளுக்கு தேர்தல் கடமை வழங்கப்பட மாட்டாது

## தெரிவத்தாட்சி அலுவலர் தீர்க்கமான முடிவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூலை 25

கிளிநொச்சி மாவட்டத்தில் ஓர் அரசியல்வாதிக்குஆதரவாகசெயல்படுவதெனமுடிவெடுத்தனர் என்று தெரிவிக்கப்படும் சம்பவத்தில் பெயர்கள் பிரஸ்தாபிக்கப்பட்ட அத்தனை அரச அதிகாரிகளினதும் தேர்தல் கடமை உடனடியாக இரத்துச் செய் யப்படுவதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரான திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர் மேலும் விவரம் தெரிவிக்கையில் –

தேர்தல் கடமை வழங்கப்படுவது தொடர்பில் ஆராயப்படும் போது இந்த விடயம் கண்டிப்பாகக் கவனத்தில் லொள்ளப்படும். அந்தப் பகிரங்கக் கூட் டத்தின் காணொலியில் பெயர் குறிப்பிட்ட எந்த அதிகாரிக்கும் தேர்தல் பணி வழங்கப் படுவதற்கான சந்தர்ப்பம் கிடையாது. – என்றார்.



# பொலிஸில் முறையிட எண்ணுகின்றாராம் ஆஸ்பத்திரி பணிப்பாளர் சத்தியமூர்த்தி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூலை 25

"எனது பெயர் முகநூல், யூ ரியூப் மற்றும் வீடியோ காணொலிகளில் அதிகம் வருவது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடவும் எண்ணுகின்றேன் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் கிளிநொச்சித் தொகுதியை மையமாகக் கொண்டு கேடயம் சின்னத்தில் சுயேச்சைக் குழு 5 இன் சார்பில் போட்டியிடும் குழுவின் தலைவரை ஆதரித்துச் செயல்படுவதென மூத்த அரச அதிகாரிகளாகப் பணியாற்றுபவர்கள் மற்றும் பணியாற்றியவர்கள் ஒன்று கூடி முடிவெடுத்துள்ளனர் என முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் பகிரங்க மேடையில் தெரிவித்திருந்தார்.

“அவர் உங்கள் பெயரையும் பதவி நிலையோடு குறிப்பிட்டுள்ளார். நீங்களும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தீர்களா?" – என்று அவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் நேரடியாகப் பதிலளிக்கவில்லை.

"தேர்தல் காலத்தில் நான் பேச முடியாது. இருப்பினும் இவ்வாறு வெளிவந்த வீடியோ தொடர்பில் மேலிடத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளேன். எனது கருத்தானால் நான் அறிக்கை மூலம் தெரிவிப்பேன். மாறாக இன்றைய உலகில் முகநூல், யூ ரியூப் மற்றும் வீடியோவில் அதிகம் வருவதைத் தடுக்க முடியாது. இருப்பினும் தேர்தல் முடிய இது தொடர்பில் விரிவாக கூறுவேன்." – என்றார்.


வெலிக்கடைச் சிறைப் படுகொலையின்
37 ஆவது ஆண்டு நினைவேந்தல்

(ஜூலை 25, 27) தமிழ்த் தேசிய வீரர்கள் தினம் - ஜூலை 25

இலங்கையில் 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனப் படுகொலையின் கோரத் தாண்டவத்தின் ஒரு படலமாக கொழும்பு வெலிக் கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைகளில் கொல்லப்பட்ட தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டி மணி, ஜெகன், தேவன், நடேசு தாசா, சிவபாதம் மாஸ்ரர், டாக்டர் இராஜசுந்தரம், குமார், சிறீகுமார், மரியாம் பிள்ளை, குமாரசிங்கம் உட்பட 53 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் தமிழ் இன விடுதலைப் போராட்டத்தில் கொல்லப்பட்ட


தலைவர் – தங்கத்துரை


தளபதி – குட்டிமணி


முன்னணி வீரர் – ஜெகன்

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொது மக்களுக்கும் மாவீரர்களுக்கும், வீர மறவர்களுக்கும் எமது வீர வணக்கம். கண்ணீர் அஞ்சலி.

விளம்பர அனுசரணை:– எம்.கே.சிவாஜிலிங்கம், செயலாளர் நாயகம், தமிழ்த் தேசியக் கட்சி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். தொலை பேசி - 077 772 920


தமிழ்த் தேசியக் கட்சி (TNP)

# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2020

**20 வருடங்களாக துக்கத்தில் தூங்கிக்கொண்டிருந்தது போதும்!**
**மக்களே! விழித்தெழுங்கள்!**
**ஒரு மாபெரும் வாக்குப் புரட்சிக்கு!**
**அரசியல் உரிமைகளையும் அபிவிருத்தியையும் அறுவடைசெய்ய தயராகுங்கள்!**

## எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!



1. அபிவிருத்தி வேண்டாம் அரசியல் உரிமைக்கே முதலிடம் என்று கூறிய முன்னாள் முதலமைச்சர் அரச சலுகைகள் கொடுப்பனவுகள், ஓய்வுதியம் வேண்டாமென்று சொல்லுவாரா?
2. இதுவரை காலமும் தமிழ் மக்களைப் பிரதிநிதிப்படுத்தியவர்களின் உட்கட்சி பூசல்களைத் தீர்க்கமுடியாதவர்கள் எம் பிரதேசத்தின் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தருவார்களா?
3. தேசியத் தலைவர் ஒன்றிணைத்த அரசியல் கட்சியின் ஒற்றுமையைக் குலைத்து, சுய நலனுக் காகப் பிரிந்து நிற்கும் தலைமைகளால் எம் மக்களுக்கு விடிவுகாலம் வருமா?
4. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஏமாந்தார்கள். மேற் கொண்டு மக்களையும் இதுவரைகாலமும் ஏமாற்றினார்கள். இனியும் மக்கள் ஏமாறத் தயாரா?
5. ஏமாற்றிய 20 ஆண்டுகள் மக்களாகிய உங்களுக்கு போதுமான காலமாக இல்லாமல் இருந்தால் மீண்டும் அவர்களுக்கே வாக்களியுங்கள்!
6. தொழில் முயற்சிகளுக்கான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தாத நிலையில், மக்கள் வறுமையின் நிமித்தம் தங்களுடைய காணி பூமிகளை அந்நியர்களுக்கு விற் கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்! இந்த நிலை தொடரும் பட்சத்தில் தமிழர் பிரதேசங்களிலும் தமிழர்கள் சிறுபான்மையினராக ஆக்கப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை.
7. விடுதலைப் போராளிகளும் மக்களும் இறுதிக்கட்ட யுத்தத்தில் பாரிய துன்பங்களுக்கு முகங் கொடுத்து, யுத்தம் மௌனிக்கப்பட்டபோது ஓடி ஒளிந்து மௌனம் சாதித்தத் தமிழ் தலைமைகள் பேரழிவுக்குப் பின்னர் சொகுசு வாழ்க்கைக்காக மக்களைப் பகடைக்காயாக்கி வாக்குவேட்டை நடத்தி வெற்றி கண்டதன் பின்பு, கோடீஸ்வராகியவர்களுக்கு நீங்கள் வாக்களிப்பீர்களா?
8. மக்களை பீதியூட்டி அங்கே இராணுவம் இங்கே இராணுவம் எல்லாம் இராணுவ மயமாக்கப்படுகின்றது என்ற கதையைக் கூறி தங்கள் வீட்டுக் காவலுக்கு முன்னுக்கு நான்கு பேர் துப்பாக்கியுடன் பின்னுக்கு நான்கு பேர் துப்பாக்கியுடனும் தமது அரசியலை முன்னெடுத்துச் செல்லும் தந்திர அரசியல்வாதிகளின் தரித்திர அரசியலுக்கு இந்தத் தேர்தலிலாவது முடிவு கட்டுவோம்.
9. அபிவிருத்தியும் அரசியல் தீர்வும் ஒன்றோடு ஒன்று சார்ந்து மேம்படுத்தவேண்டும் என்பதனைப் புரியாமல் பணம், பதவி, சொந்த நலனை முன்னெடுத்துச் செல்லும் எமது தமிழ் அரசியல்வாதி களை மக்களாகிய நீங்கள் அடையாளப்படுத்த முடியாமல் இருப்பதற்குரிய காரணங்கள் என்ன?
10. கீர்த்திவாய்ந்த தமிழ் அரசியல் தலைவர்களாலும் பேரழிவைத் தந்த விடுதலைப் போராட்டங்க ளாலும் சாதிக்க முடியாதவற்றைப் புதுப் புதுக் கட்சிகள் தொடங்கி சாதிக்க முடியும் என்று எம் மக்களை முட்டாள்களாக்கும் அரசியல்வாதிகளை நீங்கள் அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும்.

'உங்கள் வாக்கு
உங்கள் உரிமை
சரியான முறையில்
வாக்களியுங்கள்!'

**தமிழ்த் தேசத்தில் இருக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சரியான பலனடையக்கூடிய தூரநோக்குடைய திட்டங்களை நான் வகுப்பேன் என்றும் உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.**

**தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.**

## பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம்
## (விண்ணன்)



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinan05

# விஜயதாஸ தேசத்துரோகி: வாக்களிக்கவே வேண்டாம்



## சம்பிக்க கோரிக்கை

நாம் எதிரணியில் இருந்தாலும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் பல ஆதரவாளர்கள் எமக்கு இருக்கின்றார்கள். விஜயதாஸ ராஜபக்ஷ போன்ற சந்தர்ப்பவாத தேசத்துரோகிகளுக்கு வாக்களிக்க வேண்டாம் என அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விஜயதாஸ ராஜபக்ஷ என்ற அரசியல்வாதி பற்றி எதுவும் பேச விரும்பவில்லை. அவரே ராஜபக்ஷவினரை சிறையில் அடைக்கத் தனக்கு வாக்களியுங்கள்என்று 2015 ஆம் ஆண்டு கூறினார். தற்போது ராஜபக்ஷக்களின் பக்கத்துக்குச் சென்ற அவர், 'நான்தான் ராஜபக்ஷவினரைக் காப்பாற்றினேன். நானே சட்டத்தை வளைத்தேன்' என்று கூறி தனக்கு வாக்களிக்குமாறு கோருகின்றார்.

விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு பட்டப்படிப்புக்கான சான்றிதழ் எங்கிருந்து கிடைத்தது என்று உதய கம்மன்பில கேட்ட கேள்விக்கு இதுவரை அவர் பதிலளிக்கவில்லை.

தற்போது ராஜபக்ஷவினரைப் போற்றிப் புகழ்ந்து வரும் உதய கம்மன்பில ஜாதிக ஹெல உறுமயவில் இருக்கும்போது, கோட்டாபய நந்தசேன ராஜபக்ஷவை, 'கொனா (மாடு) ராஜபக்ஷ' எனக் குறிப்பிட்டிருந்தார் - என்றார்.

# சில்லறைகளில் ஒன்றே சுமந்திரன்; அவருடன் விவாதிக்கத் தயாரில்லை

## கஜேந்திரகுமார் சாட்டையடி



கொள்கை சார்ந்த ஆரோக்கியமான விவாதமொன்றை முன்னெடுப்பதற்குத் தயாராக இருக்கின்றேன். அதற்காக சுமந்திரன் உள்ளிட்ட சில்லறைகளுடன் விவாதத்தில் ஈடுபட முடியாது.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் ஆகியோர் பொது வெளியில் விவாதிப்பதற்கு முன்வருவார்களாயின் தாயகத்தின் எந்தப் பகுதியிலும் அதனை நடத்தினாலும் பங்குகொள்வதற்குத் தயாராக இருக்கின்றேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் தேசியக் கொள்கை சார்ந்து விவாதம் ஒன்றுக்கு நான் எப்போதுமே தயாராக இருக்கின்றேன் என்னுடன் விவாதம் செய்பவர்கள் பொறுப்புக்கூற வல்லவர்களாக இருக்க வேண்டும். அவர்களின் நிலைப்பாடுகளுக்கும் கட்சியின் நிலைப்பாடுகளுக்கும் மாறுபட்ட நிலைமை இருக்கக்கூடாது.

அவ்வாறு இரண்டு வேறுபட்ட தரப்பினருடன் பொதுவெளியில் விவாதம் நடத்துவது பொருத்தமற்றது. சுருங்கக்கூறின் சில்லறைகளுடன் விவாதிப்பதில் எவ்விதமான பயனுமில்லை.

"சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்தாலும் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்கள் சுமந்திரன் வெளியிடும் கருத்துக்கள் அவரின் தனிப்பட்ட கருத்துக்கள் என்றே தெரிவித்து வருகின்றனர் - என்றார்.

## விபத்தில் பலி

கிளிநொச்சி - ஜெயபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.40 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மன்னார் - யாழ்ப்பாணம் வீதியில் ஜெயபுரம் பகுதியில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் யாழ்ப்பாண நோக்கி பயணித்த வான் ஒன்று மோதியுள்ளது. இந்த விபத்தில், வானில் சாரதிக்கு அருகில் இருந்து பயணித்தவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம், மல்லாகம் பகுதியை சேர்ந்த 43 வயதுடைய சுவேந்திரன் என்பவரே உயிரிழந்தவர் என்ற தகவல்கள் கூறுகின்றன. மேலும் சாரதியும் மற்றுமொருவரும் இந்த விபத்தில் காயமடைந்துள்ளனர்.





## யாழ். நகரக் கடைகளில் சுமந்திரன் அணி பிரசாரம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்.ஜூலை ல்25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சி.சிறிதரன் ஆகியோருக்கு ஆதரவு கோரி நேற்றைய தினம் யாழ். நகரப் பகுதியில் சூறாவளிப் பிரச்சாரம் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவு கோரி மேற்கொள்ளப்பட்ட பரப்புரையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுடன் மாநகர சபை உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள், தொண்டர்களும் வர்த்தக நிலையங்களிற்குச் சென்று துண்டுப் பிரசுரங்களை வழங்கி ஆதரவு கோரியமையோடு முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராஜா, பசுபதிப்பிள்ளை ஆகியோருடன் மேலும் பல தொண்டர்களும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறு பரப்புரையில் ஈடுபட்ட கூட்டமைப்பினருக்கு வர்த்தகநிலைய உரிமையாளர்கள் பலரும் குளிர்பானங்கள் மற்றும் சிற்றுண்டிகள் வழங்கி தமது ஆதரவை தெரிவித்தனர்.




# மீன் சின்னத்தை மக்களிடம் எடுத்துச் செல்ல முயற்சியாம்

"எமது கட்சியின் சின்னமான மீன் சின்னம் வடக்கு கிழக்கு மக்கள் மத்தியில் போய்ச் சேரவில்லை. ஆதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான செயற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் வேட்பாளருமான சீ.வீ.விக்கினேஸ்வரன்.

வடக்கு, கிழக்குத் தேர்தல் நிலைமைகள் தமக்கு இப்போது சாதகமாக உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழிலுள்ள தமது கட்சி அலுவலகத்தில் இன்று ஊடகங்களைச் சந்தித்து சமகால தேர்தல் நிலைமைகள் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# வங்குரோத்துப் பேச்சுக்களைப் பிக்குகள் நிறுத்தினால்தான் ஒருமித்த நாடு சாத்தியம்

## வடமராட்சியில் நேற்று சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவிப்பு



**பிரபாகரன் டிலக்சன்**

இந்த நாடு ஒருமித்த நாடாகவும் எல்லா இனத்தவர்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றால் புத்த பிக்குகள் தங்களுடைய வங்குரோத்து தனமான பேச்சுக்களை நிறுத்த வேண்டும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவித்தார்.

வடமராட்சியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் 11 நாள்களுக்குள் பாரிய மாற்றங்களை உருவாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக நீண்ட போராட்டத்தினை நடத்தியவர்கள். அந்த போராட்டத்திற்கான தலைமையை உருவாக்கிய பெருமை வடமராட்சி மண்ணைச் சாரும். தமிழ் மக்களை உலக நாடுகள் எல்லாம் அறிந்து வைத்திருக்கின்றா என்றால் அதற்கு காரணம் முப்படைகளைக் கொண்டு நாம் நடத்திய விடுதலைப் போராட்டமாகும்.

தமிழ் மக்கள் கௌரவமாக சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பதற்காக இந்த நாடு பாரிய போராட்டங்களை சந்தித்துள்ளது. ஆனால் இன்றும் கூட அரசாங்கம் சமத்துவமான உரிமைகளை கொடுப்பதற்குத் தயாராக இல்லை. தாங்கள் போடுகின்ற பிச்சையை தமிழர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என சில பிக்குமார் கூறுகின்றனர். தாங்கள் கொடுப்பதை தமிழர்கள் ஏற்க வேண்டும் எனத் தென்பகுதி அரசியல்வாதிகள் கூறுகின்றனர். நீங்கள் கொடுப்பதை வேண்டுவதற்கு நாங்கள் பிச்சை கேட்கவில்லை. எங்கள் உரிமையை கேட்கின்றோம். எங்கள் மொழியை பேசுவதற்கு கேட்கின்றோம்.

தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி பேசினால் எங்களை இனவாதிகள் என்கிறார்கள். எமது தேவைகள் பற்றி பேசினால் எங்களையும் பிரபாகரன் என்கிறார்கள். புத்தர் சரணம் கச்சாமி எனப் புத்தரின் போதனைகளைப் போதித்துக் கொண்டு இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவது பிக்குகளுக்கு அழகில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

எங்களுடைய உரிமைப் போராட்டம் இலங்கைக்குள் முடங்கிவிடவில்லை என்பதனை ஜனாதிபதியும் பிரதமரும் புரிந்துகொள்ள வேண்டும். எமது உரிமைப் போராட்டத்தின் தேவைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையிலும், பல உலக நாடுகளின் நாடாளுமன்றங்களிலும் பேசுகின்றார்கள். பெரும்பான்மையினருக்கு எந்தளவு ஆணவம் இருக்கின்றதோ அந்தளவிற்கு தமிழன் என்ற ஆணவமும், இந்த மண்ணின் மைந்தர்கள் என்ற ஆணவமும் எமக்கு உண்டு.

நாங்கள் யுத்தத்திலே பல லட்சம் உறவுகளை, பல ஆயிரம் கோடி சொத்துக்களை இழந்திருக்கின்றோம். இந்த இழப்புக்கள் எல்லாம் பெரும்பான்மையினருக்கு அடிமையாவதற்கு அல்ல என்பதனை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கைத் தீவில் தமிழர்களோடு ஆட்சியைப் பகிர்ந்து கொள்ள பெரும்பான்மையினர் முன்வர வேண்டும்.

கொரோனா நெருக்கடி நிலமைகளின் பின்னர் இந்து சமுத்திரத்தில் நிலைகொண்டிருந்த சீனாவின் ஆதிக்கத்தில் தற்போது மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. ஜனாதிபதியும் பிரதமரும் எல்லாம் எமது கைகளிலேயே உள்ளது என ஆணவத்தில் ஆடக்கூடாது. பூகோள நிலைமைகள் மாற்றமடைகின்றன.

கடந்த காலங்களில் எமது பிரச்சினைகளை தீர்ப்பார்கள் என நாங்கள் நம்பி வாக்களித்தவர்கள் எம்மை ஏமாற்றிவிட்டார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் யாப்பு, நில ஆக்கிரமிப்பு தொடர்பாக எமக்கு என்ன செய்தார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

இப்போது மாற்றுத் தலைமை ஒன்று உருவாகியுள்ளது. மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் – என்றார்.

## மனநலம் பாதிப்புற்ற சிறுமியின் மீது துஷ்பிரயோகம்; தம்பதியர் கைது!

மனநலம் பாதிக்கப்பட்ட 12 வயது சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தல – ஒக்கம்பிடிய பகுதியை சேர்ந்த கணவன் மற்றும் மனைவியே கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய ஒக்கும்பிடிய பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர். சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்கென வைத்தியாசலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் வெல்லவாய நீதிவான் நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

## பகிரங்க விவாதத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் தொலைக் காட்சி ஒன்று பொதுத் தேர்தல் தொடர்பிலே ஒரு பகிரங்க வாதத்தைப் பொது வெளியிலே மூன்று தமிழ் அணிகள் கலந்துகொள்ளக் கூடிய விதத்திலே ஏற்பாடு செய்து சில நடவடிக்கைகளை சில நாட்களுக்கு முன்னராக முன்னெடுத்திருந்தது. தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலே பிரதான அணிகளாக இருந்து கொண்டிருக்கின்ற எங்களுடைய தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றினுடைய சார்பிலே தலா இருவர் கலந்துகொள்ளக் கூடிய விதத்திலே யாழ்ப்பாணத்தில் பொது வெளியில் ஒரு பகிரங்க விவாதமொன்றை நடத்துவதற்கு அந்தத் தனியார் தொலைக் காட்சி திட்டமிட்டு இந்த மூன்று தரப்பினரையும் தொடர்பு கொண்டிருந்தது.

அந்த நிகழ்வு நடைபெறக் கூடிய சூழல் இருந்த போதிலும் சில பல காரணங்களினாலே அது கைகூட வில்லை. எங்களுடைய தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியைப் பொறுத்தமட்டிலே நாங்கள் அதில் ஆரம்பத்தில் கலந்துகொள்ள விரும்பியிருந்தோம். எனினும், பின்னர் குறித்த தனியார் தொலைக்காட்சியினுடைய பின்னணி தொடர்பிலே சில சந்தேகங்கள் எங்களுக்கு எழுந்திருந்த நிலையிலும், மேலும் பரப்புரைப் பொதுக்கூட்டங்கள் பல்வேறு இடங்களிலும் நிச்சயிக்கப்பட்டு மும்முரமாக நடவடிக்கைகள் நிகழ்ந்து கொண்டிருந்த சூழ்நிலையிலும் எங்களாலே குறிப்பிட்ட தினத்திலே அந்த விவாதத்தில் கலந்துகொள்வது சாத்தியமற்றதாகி இருந்தது.

அதனைத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சம்பந்தப்பட்ட தனியார் தொலைக்காட்சிக்கு அறிவித்திருந்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் சில காரணங்களால் கலந்துகொள்ள விரும்பவில்லை என்பது எங்களுக்குப் பின்னர் தெரியவந்தது. இந்தநிலையிலே அந்த நிகழ்ச்சி நடைபெறவில்லை. இதனையடுத்து அடுத்த நாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் இந்த நிகழ்விலே கலந்துகொள்ளாமல் ஏனைய இரண்டு கட்சிகளும் அதாவது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பின்வாங்கியிருக்கின்றன; இந்த இரண்டு கட்சிகளும் நேரடியாக விவாதிப்பதற்கு அஞ்சுகின்றார்கள் என்ற தோரணையிலே சில கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

இன்னும் சொல்லப்போனால் அவர் தெரிவித்த கருத்துக்கள் சவால் விடுக்கும் தோரணையில் அமைந்திருந்தன. தொனியும் அப்படித்தான் இருந்தது. ஆதனால் அடுத்த நாளே எங்களுடைய பரப்புரைப் பொதுக் கூட்டமொன்றில் வைத்து சுமந்திரன் எங்களுக்கு சவால் விடுத்திருக்கின்றார் என்று குறிப்பிட்டு அந்தச் சவாலை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் என்பதைத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சார்பிலே நான் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தேன்.

எங்கள் தரப்பிலே நானும் நண்பர் சுரேஷ் பிறேமச்சந்திரனும் இந்த விவாதத்திலே கலந்துகொள்ளத் தயாராக இருக்கின்றோம். பொது வெளியிலே அந்த விவாதம் நடைபெற வேண்டும். பொது மக்கள் முன்னிலையில் நடைபெறுகின்ற அந்த விவாதத்திலே பாதுகாப்பு என்ற பேரிலே படைத் தரப்பினர் விவாத மேடைக்கு அருகிலோ அல்லது விவாதம் இடம்பெறுகின்ற மண்டபத்தின் சூழலிலோ இருக்கக்கூடாது என்கிற நிபந்தனையையும் நான் தெரிவித்திருந்தேன்.

அவ்விதம் தெரிவித்தமைக்கான ஒரே காரணம் சுமந்திரன் பாதுகாப்பு நோக்கங்களின் அடிப்படையிலே படைத்தரப்பினர் புடைசூழ கடந்த சில காலமாக பொது வெளியிலே தன்னுடைய நடமாட்டத்தை வைத்திருப்பது நாடறிந்த விடயம். ஆகவேதான் இந்த விவாதத்துக்கு அவர் வருகின்றபோது வழக்கமாக அவருடன் கூட வருகின்ற படை, பட்டாளங்கள் சமுகமளிப்பார்களாக இருந்தால் அது தேவையற்ற சலசலப்புக்களையும் இன்னும் சொல்லப் போனால் அநாவசியமான பதற்றத்தை அல்லது அச்சத்தை பார்வையாளர்கள் மத்தியில் ஏற்படுத்தலாம் என்ற விசுவாசமான நோக்கத்துடன் தான் நான் சம்பந்தப்பட்ட நிபந்தனையைத் தெரிவித்திருந்தேன்.

ஆனால், இப்போது சுமந்திரன் இணையமொன்றுக்கு அளித்திருக்கின்ற பேட்டியிலே இவ்விதம் நான் தெரிவித்தது வேறு யாராவது எனக்குக் கூறியதன் அடிப்படையில் தெரிவிக்கப்பட்ட விடயமாக இருக்க வேண்டும் என்றும், ஒருவேளை தன்னைக் கொலை செய்வதற்கும் முயற்சி எடுக்கப்படுகின்றதோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இதையிட்டு வாய்விட்டுச் சிரிப்பதை விட என்னால் எதுவும் செய்ய முடியாமல் இருக்கின்றது. தமிழிலே ஒரு பழமொழி உண்டு. அதாவது மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று சொல்லுவார்கள். சுமந்திரன் அநாவசியமாகக் கலவரப்படக் கூடாது. ஆனால், அவருடைய இந்தப் பதற்றம் எனக்குப் புரிகின்றது. எனவேதான் அந்த நிபந்தனையைத் தொடர்ந்து நான் வலியுறுத்தப் போகின்றேன்.

அதேநேரத்தில் இன்னுமொரு தனியார் தொலைக் காட்சியொன்று அதுவும் யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டு இயங்குகின்ற தனியார் தொலைக்காட்சி என்னுடைய அறிவிப்பு வந்ததையடுத்து சுமந்திரனும் சவாலை ஏற்றுக்கொள்வதைப் பகிரங்கமாகத் தெரிவித்ததன் அடிப்படையிலே என்னைத் தொடர்பு கொண்டு விவாதத்தை நடத்துவது பற்றி சில தகவல்களைக் கூறியிருந்தது. நான் அதற்கும் சம்மதித்தேன். விவாதத்தை நடத்துவது தொடர்பிலே ஏற்பாடுகளை அவர்கள் செய்யலாம் என்றும் நானும் கூறியிருக்கின்றேன். மீண்டும் நேற்றுமுன்தினம் அவர்களோடு தொடர்புகொண்டு இந்த விடயத்தை நான் நினைவுபடுத்தியிருக்கின்றேன்.

இந்த விவாதத்திலே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கலந்துகொள்ளாமல் போகலாம் என்ற கருத்தையும் அந்தத் தனியார் தொலைக்காட்சி சார்பிலே என்னுடன் தொடர்புகொண்ட நண்பர் கூறியிருந்தார். அது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தீர்மானிக்க வேண்டிய விடயம்.

ஆனால், எங்களுடைய தமிழ் மக்கள் தேசிய கூட்டணியைப் பொறுத்தமட்டிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாங்கள் விவாதிக்கத் தயாராக இருக்கின்றோம். கூட்டமைப்பின் சார்பில் இருவர் வருகின்றார்கள் என்றால் எங்கள் தரப்பிலும் இருவர் பங்கேற்பார்கள். இல்லை சுமந்திரன்தான் கூட்டமைப்பின் ஏக பிரதிநிதியாகக் கலந்துகொள்ளப் போகின்றார் என்றால் எங்கள் தரப்பிலே நான் கலந்த கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

அந்தத் தனியார் தொலைக்காட்சி இந்த விவாதத்தை தொலைக்காட்சி நிறுவனத்துக்குள்ளேயே வைத்து நேரடி ஒளிபரப்புச் செய்ய இருக்கின்றது. அதற்கும் நான் சம்மதித்திருக்கிறேன். இப்படியான சூழலிலே சுமந்திரன் தன்னுடைய பாதுகாப்பை பற்றி அநாவசியமாகக் கவலைப்பட வேண்டியதில்லை.

இப்போது எங்கள் முன்னாலுள்ள கேள்வி ஒன்றே ஒன்றுதான். எங்களுக்குத்தான் சவால் விடுக்கப்பட்டது. நாங்கள் அதை ஏற்றுக்கொண்டோம். ஆனால், சுமந்திரன் அதற்குப் பிறகும் நாங்கள் சவால் விடுத்தது எனத் தெரிவித்திருந்தார். அது உண்மையல்ல. விடுக்கப்பட்ட சவாலை நாங்கள் ஏற்றிருக்கின்றோம். அவரும் எங்களுடன் விவாதிக்கத் தயார் என்று கூறியிருக்கின்றார். ஆகவே, இந்த அடிப்படையிலே எங்களைத் தொடர்பு கொண்ட தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தினரோ அல்லது வேறு ஏதாவது பொது அமைப்போ இந்த விவாதத்தை முன்னெடுக்க விரும்பினால் அடுத்து வரும் ஒரு சில தினங்களுக்குள்ளே அதை நிகழ்த்துவதற்கான ஏற்பாடுகளை விரைந்து செய்ய வேண்டும்.

ஏனெனில் தேர்தல் பரப்புரை எதிர்வரும் 2 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைய இருக்கின்றது. நாங்களும் யாழ்ப்பாணத்துக்கு அப்பால் வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்குச் சென்று பரப்புரைக் கூட்டங்களை மேலும் நடத்த வேண்டியிருக்கின்றது. ஆகவே. நேரம் நெருக்கடியான ஒன்றாக இருந்து கொண்டிருக்கின்றது. இந்த விவாதத்தில் தமிழ் மக்கள் பல விடயங்களைத் திட்டவட்டமாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

இறுதியாக சுமந்திரனுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். நாங்கள் ஜனநாயக அரசியல் விழுமியங்களைப் பேணுகின்றவர்கள். சுமந்திரனுக்கு எங்களைப் பற்றி நன்றாகத் தெரியும். ஆகவே, அநாவசியமாக சிவாஜிலிங்கத்தினுடைய பெயரையும் இழுத்து தேவையற்ற விதத்திலே தன்னைக் கொலை செய்ய முயற்சி நடக்கின்றதோ என்றெல்லாம் அதீதமான கற்பனைகளிலே சுமந்திரன் தயவு செய்து ஈடுபடக் கூடாது. அவருடைய பாதுகாப்பிலே எங்களுக்கு நிரம்பவும் அக்கறை உண்டு. இந்த விவாதத்தை நாங்கள் வரவேற்கின்றோம். அதற்காகக் காத்திருக்கின்றோம் – என்றார்.

# நான்கு பிள்ளைகளின் தாயைக் காணவில்லை; வவுனியாவில் ஏங்கி தவிக்கின்றன பிள்ளைகள்

வவுனியா, ஜூலை 25

வவுனியா புதிய கற்பகபுரம் பகுதியில் வசித்து வரும் 31வயதுடைய 4பிள்ளை களின் தாயைக் காணவில்லை என அவ ரின் கணவர் வவுனியா பொலிஸ் நிலையத் தில் முறைப்பாட்டினை மேற் கொண்டுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வவு னியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு செல்வதாக தெரிவித்து 7வயதுடைய அவரின் கடைசி மகளுடன் கிரிதரன் வக்சலா (சுரேக்கா) என்ற இந் தப் பெண் மற்றைய மூன்று பிள்ளைகளையும் வீட்டில் விட்டுச் சென்றுள்ளார்.

அன்றையதினம் மாலையாகியும் அந்தப் பெண் வீடு திரும்பவில்லை. அதனையடுத்து அவரின் கணவரினால் மனைவியைக் காண வில்லை எனத் தெரிவித்து வவுனியா பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட் டுள்ளது.

தாயாரை காணாது அவரின் மூன்று பிள்ளைகளும் தவித்து வருவதுடன் சாப்பாட்டினையும் தவித்து சோகத்தில் நிற்கின்றனர்.

காணாமல் போன பெண்ணின் இடது பக்கக் கன்னத்தில் கருப்பு நிறத்தில் மச்சம் காணப்படுவதுடன் இறுதியாக சென்ற சமயத்தில் நீல நிற சுடிதாரும் வெள்ளை நிற சுடிதார் கால் ஆடையும் அணிந்திருந்தார் என அவரின் கணவர் தெரிவித் துள்ளார்.

இவரை யாராவது கண்டால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது கீழேயுள்ள இலத்திற்கோ அழைப்பினை ஏற்படுத்தி தகவல் வழங்கும்படி கோரப்பட்டுள்ளது. கிரிதரன் – 0775255861, மோகன் – 0766327556, முகிசன் – 0778899787.

## சர்ச்சைக்குரிய தேர்தல்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நேரத்தில் அதற்கு பொறுப்பாக இருந்தவர் மொகமட் என்னும் உத்தியோகத்தராவார். அப்பாது தேர்தல் அதிகாரியாக இருந்த அவர் இப்போது இளைப்பாறிவிட்டார். இருப்பினும் அவரை முக்கியமாகத் தேர்ந்தெடுத்து மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

2015 ஆம் ஆண்டு நடந்த தேர்தலின் முடிவுகளில் பல பிழையான சம்பவங்கள் நடந்ததாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்தப் பிழையான சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத் திற்கு செல்லவில்லை என்பது உண்மைதான். எனினும் பொதுவாகத் தமிழ் மக்களிடையே அன்று நடந்த சம்பவம் தொடர்பாகப் பல கருத்துக்கள் உள்ளன.

இம்முறை தேர்தலிலும் அவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதற்கான சூழ்நிலையே உள்ளது. அன்றைய பிழையான சம்பவங்கள் நடைபெற்றமைக்கு முக்கியமாக இருந்த நபரான மொகமட்டை திரும்பவும் இங்கு அனுப்ப வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வி எழுகின்றது.

அதுவும் அவர் இளைப்பாறிய பின்னர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணம் என்ன? தேர்தல் திணைக்களத்தில் உள்ள யாராவது ஒரு சிரேஷ்ட தமிழ் அதிகாரியாயை இங்கு அனுப்பாமல் மொகமட்டை இங்கு அனுப்ப வேண்டிய அவசியம் என்ன?

யாழ்ப்பாணத்திற்கு மட்டும்தான் இவ்வாறு அதிகாரி ஒருவரை அனுப்பியுள்ளார்கள். ஏனைய மாவட்டங்களுக்கு இது போன்ற அதிகாரிகள் எவரையும் தேர்தல் ஆணைக்குழு அனுப்பவில்லை.

இதற்கு பின்னல் அரசாங்கம் எவ்வகையான எண்ணங்களை வைத்திருக்கின்றது என்பது தொடர்பில் சரியாக விளங்கவில்லை. ஆனால் ஜனநாயகத் திற்கு எதிரான ஒரு செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்பது கணிப்பு. – என்றார்.




# நல்லூரானுக்கு இன்று கொடி!

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்த சுவாமி கோயில் இலங்கையில் மிகவும் புகழ் பெற்ற இந்துக் கோயில்களுள் முதன்மையானது. 12ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இருந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக நல்லூர் விளங்கியது என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஈழமணித் திருநாட்டில் குறிப்பாக சிவ பூமி என்றழைக்கப்படுகின்ற யாழ்ப்பாண மண்ணின் வரலாற்றோடு – தமிழர்களின் பண்பாட்டோடு முருக வழிபாடு பிரிக்கப்பட முடியாததொன்றாகக் காணப்படுகிறது. யாழ்ப்பாணமெங்கும் முருகப்பெருமானுக்குப் பல ஆலயங்கள் காணப்படுகின்றன. ஆயினும் அபிகேக் கந்தன் என ஆராதிக்கப்படுகின்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலும், அன்னதானக் கந்தன் எனப் போற்றப்படுகின்ற தொண்டமானாறு செல்வச் சந்திதி முருகன் ஆலயமும் புகழ் பூத்தவை.



அந்த வரிசையில் அலங்காரக் கந்தன் என்ற பேருக்கேற்றாற் போல என்றும் குன்றாத அழகுடைய குமரனாக நல்லையம்பதியில் வீற்றிருந்து அருளாட்சி புரிகின்ற கந்தப்பெருமானுக்கு இன்று துவஜாரோகணம். இன்று காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கும் மகோற்வசம் தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறவுள்ளது.

நல்லூருக்கென்று தனித்துவமான சில அம்சங்கள் காணப்படுகின்றன. அவற்றில் முதன்மையானது நல்லூரில் அமர்ந்து அருள் செய்கின்ற ரீ சண்முகப் பெருமான். எந்தத் திசையில் இருந்து பார்த்தாலும் அழகு குன்றாத – அருளொளி வீசுகின்ற திருவுருவமாகக் காணப்படுகின்ற சண்முகர் ஒவ்வொரு வருடத்திலும் இரண்டு முறை எழுந்தருளியாக வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நாளன்றும், கந்தசஷ்டி உற்சவத்தின் நிறைவு நாளான்று வீதியுலா வந்து சூரனை வதம் செய்கின்ற போதிலும் எழுந்தருமுவது வழமை.

மற்றையது, நல்லூர்த் தேரடி. ஈழத்துச் சித்தர் மரபின் வழி வந்த குரு – சிஷ்ய பாரம்பரியத்தின் ஊற்றாகத் திகழ்வது இந்தத் தேரடி தான். செல்லப் பாச் சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்ற பெருஞ் சித்தர்கள் உலா வந்து, நடமாடிய இடம் என்ற வகையில் நல்லூர்த் தேரடி புகழ் பெறுகிறது.

மூன்றாவது, நல்லை நகர்க் காவலனாய்த் திகழும் நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வயிரவர் தேவஸ்தானம். வணங்கிடும் அடியவர் துணை நிற்கும் பெருமை மிக்கராக இங்குள்ள வைரவப் பெருமான் போற்றப்படுகிறார்.

இக்கோயிலின் தோற்றம் பற்றிச் சரியான தெளிவு இல்லையெனினும், யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் மிகவும் முக்கியமான ஒரு கோயிலாக இருந்தது என்பதில் ஐயமில்லை. யாழ்ப் பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சனொருவனான புவனேகவாகு என்பவனால் இக் கோயில் கட்டுவிக்கப்பட்ட தென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது.

இது 15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிப் 17 ஆண்டுகள் ஆண்ட கோட்டே சிங்கள அரசின் பிரதிநிதியான – பிற்காலத்தில் சிறீசங்கபோதி புவனேகவாகு எனப்பெயர் கொண்டு கோட்டே அரசனான, செண்பகப் பெருமாள் என்பவனால் கட்டப்பட்டதென வேறு சிலர் கூறுகிறார்கள். இதற்கு ஆதாரமாக நல்லூர்க் கந்த சுவாமி கோயிலில் இன்றும் கூறப்பட்டு வரும் கட்டியத்தை ஆதாரமாகக் காட்டுகிறார்கள்.

'சிறீமான் மஹாராஜாதி ராஜாய அகண்ட பூமண்டலப்ரதியதி கந்தர விஸ்வாந்த கீர்த்தி சிறீ கஜவல்லி மஹாவல்லி சமேத சுப்ர மண்ய பாதாரவிந்த ஜனாதிரூட சோடச மஹாதான சூர்யகுல வம்ஸோத்பவ சிறீ சங்க போதி புவனேகபாகு ஸமுஹா.

என சமஸ்கிருதத்தில் உள்ள அந்தக் கட்டியத்தின் பகுதி ஒன்று கூறுகிறது.

## நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவ விசேட தினங்கள்

| | |
|---|---|
| 25.07.2020 | கொடியேற்றம் |
| 03.08.2020 | மஞ்சம் மாலை |
| 11.08.2020 | அருணகிரிநாதர் உற்சவம் |
| 12.08.2020 | சூர்யோற்சவம் |
| 12.08.2020 | கார்த்திகை உற்சவம் |
| 13.08.2020 | சந்தானகோபாலர் உற்சவம் |
| 13.08.2020 | கைலாசவாகனம் |
| 14.08.2020 | கஜவல்லிமஹாவல்லி உற்சவம் |
| 14.08.2020 | வேல்விமானம் |
| 15.08.2020 | தெண்டாயுதபாணி உற்சவம் |
| 15.08.2020 | ஒருமுகத் திருவிழா |
| 16.08.2020 | சப்பரம் |
| 17.08.2020 | தேர் காலை |
| 18.08.2020 | தீர்த்தம் |
| 19.08.2020 | பூங்காவனம் |
| 20.08.2020 | வைரவர் சாந்தி உற்சவம் |

The Lemon Tree
TASTE OF VEG LAND
— INDIAN VEG RESTAURANT —
No 369, Point Pedro Road, Nallur,
0760642983

Northway Family Mart
077 787 8708
021 222 6002
077 764 7645
No.184,Pramesvara Junction,
Thirunelvely, jaffna

நியூ லலிதா நகை மாளிகை
கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
Tel 021 222 4648
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
Tel 021 228 3434
A9 வீதி கிளிநொச்சி
Tel 021 222 2552
WESTERN UNION MONEY TRANSFER

ரூபி ஜூவல்லறி
இல.7. பலாலி வீதி
திருநெல்வேலி சந்தி
phone no 0779 90 58 79
0768 04 60 48

waves
Authorised Distributor
RAM SECURITY SYSTEM
NO 320 , Point Pedro Road,
Nallur, jaffna
Email- tusanthan15@gmail.com
077 15 67 597 / 077 49 31 085
Enjoy your secure Life

YARL SMART
Water solution (Pvt) Ltd
"Smart Water, Smart Life"
Yarl Smart Smart
No. 341 K.K.S Road, Jaffna.
021 430 0044, 076 666 5267

TEL 077 473 6057
077 287 1841
HIKVISION
MEGA STORE
CCTV INSTALLION
164, palay Road, thirunelvely, jaffna
hikvisiomegastor@gmail.com
Hot Line -021 222 7126

கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS
LEARNING DRIVER
தலைமைக் காரியாலயம்
கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
0777 225 292
kirubaalearners
kirubaalaerners@gmail.com
Hotline 0777 225 292
0714 546 960
021 222 4353

| | | |
|---|---|---|
| சாவகச்சேரி 021 227 0700 | தெல்லிப்பழை 021 222 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| சுன்னாகம் 021 224 2022 | கச்சேரி 021 222 6699 | ஆவரங்கால் 021 222 6699 |
| தெல்லிப்பளை 021 224 3737 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |
| விசுவமடு 021 320 1515 | பு. நகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| மன்னார் 021 225 1656 | | |

அன்னா விரைவுப் பொதிகள் சேவை
5Kg/11Kgக்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்
பிரான்ஸ் - ரூ.1500/ரூ.1300
ஜேர்மனி - ரூ.1500/ரூ.1300
டென்மார்க் - ரூ.1500/ரூ.1300
கொலண்ட் - ரூ.1500/ரூ.1300
பெல்ஜியம் - ரூ.1500/ரூ.1300
இத்தாலி - ரூ.1500/ரூ.1300
லண்டன் - ரூ.1500/ரூ.1300
இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.
5 – 8 வேலை நாள்கள்
எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்.
லண்டன் - 1000/-, பிரான்ஸ் - ஜேர்மனி - டென்மார்க் - கொலண்ட் -1200/- கனடா - அமெரிக்கா -1500/- சுவிஸ் -1400/- (வரி உள்ளடக்கப்படவில்லை)

- கே.எஸ்.சிவஞானராஜா -





# மகிமைகள் நிறைந்த நல்லூர்

நல்லமருந்தொரு குருமருந்தை நான் நல்லூரில் கண்டேனே எல்லையில்லாப் பிணி தீர்க்கும் மருந்து இம்மை மறுமைக்கும் ஏற்ற மருந்து இல்லையெனாது கொடுக்கும் மருந்து ஏழை அடியார்க்கு இரங்கும் மருந்து வல்லவன் செல்லப்பன் தந்த மருந்து வாழ்த்தும் கணபதிக்கு வந்த மருந்து புல்லர்கள் கண்டும் புசியா(த) மருந்து புண்ணியர் யோகர் புசிக்கும் மருந்து!!! ஆம் கொல்லவரும் யமனையும் குலை நடுங்க வைக்கும் கொடிய கொரோனாவையும் கூண்டோடு அழிக்கும் நல்ல மருந்தொரு அருமருந்தை நான் நல்லூரில் கண்டேனே! எல்லை இல்லாப் பிணி இனியிங்குவராது எப்போதும் கும்பிட்டுப்பாடு கிடைக்கும்!

உலகம் முழுவதுமாக யாழ்ப்பாணத்திற்கு ஓடிவந்து வீதியில் ஒருக்கால் விழுந்துகும் பிட்டு, வில்லங்கம் தீர்க்கின்ற அற்புதத்திருப்பதியே நல்லூராகும். செல்லப்பசுவாமிகளும் யோகர்சுவாமிகளும், நல்லூர் முருகனும் கூடிக்குலாவி தேரடியில் ஒன்றாயிருந்து பேறாகிய அதிசயமான திருத்தலம் நல்லூராகும். மூர்த்தி,தலம்,தீர்த்தம் மற்றும் கீர்த்தி,நலம்,வாக்கு சித்திக்கும் அருட்பதியும் நல்லூராகும்.

சிவபூமியில் தெட்டெனத்துலங்கும் முருக ஆலயங்களாக, நெஞ்சில் வரமாபவை என்றவாறு, கதிர்காமம் முருகன் நல்லூர் முருகன் மாவிட்டபுரம் முருகன் செல்வசந்நிதி முருகன் கந்தவனக்கடவை முருகன் மண்டூர் கந்தசுவாமி இணுவில் கந்தசுவாமி கொக்குவில் மஞ்சவனப்பதிமுருகன் ஆகியவை மந்திரமாகின்றன.

இவற்றுள் அலங்காரக்கந்தனாக திருவுலாவந்து அருள்பாலிப்பவர் நல்லூர் முருகன் பேறாகின்றார். இரவிலும் பகலிலும் பளிச்சிடும் தங்க ஆபர ணங்களினால் அடியார்களை வசீகரித்து வாழ்வளிக்கும் தெய்வமாக நல்லையில் முருகன் பிரகாசிக்கின்றான். கோடி கோடியாகப் பணத்தை நல்லூரான் ஒரு போதும் எதிர்பார்ப்பதேயில்லை. வெறுமனே ஒருரூபா மட்டுமாக பாமரர்களும் ஏழைகளும் வழிபாடாற்றக் கூடிய பாங்கினை உலகிலேயே நல்லூரான் இரங்கி இறங்கி எளிமையாக வரமாக்கியுள்ளான். ஒருரூபா போதும்! முருகனோடு பேசலாம், கதைக்கலாம், வாழலாம், வரம் கேட்கலாம், வெல்லலாம்.

ஒருரூபா இல்லை என்பதற்காக நல்லூரான் எவரையுமே வெறுங்கையோடு வீட்டுக்கு அனுப்பவே மாட்டான்.

நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும் செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்த நாடு தேங்காயுடன் பழம் நீ கொண்டு செல்லுவாடி உன்மனம் ஓடினாலும் வருத்தங்கள் கோடி கோடியாகக் கூடினாலும் குறைகள் வந்துதேடி உன்னை மூடினாலும் செல் லப்பன் பாதம் சிந்தித்தால் ஓடிஓடிப்போமே! பெண்டு பிள்ளைகளென்று பேதைமை கொண்டு நீ கண்டகண்ட இடம் கலங்கி நீ திரியாதே!

ஆம்! நற்சிந்தனையில் தவத்திரு யோகர் சுவாமிகள் பாடி அருளிய முத்தான பாடல் இதுவாகும். 17.10.1944இல் இருந்து இந்தப்பாடல் நல்லூர் தேரடியிலும்,கொழும்புத்துறை ஆச்சிரமத்திலும் இந்தப்பாடல் தினந்தினம் ஒலிப்பதைக் கேட்கலாம்.

## நல்லூரில் கந்தபுராண கலாச்சாரம்

சிவதீட்சை,புராணம் படித்தல்,படிப்புக்கேட்டல்,புராணங்களில் கூறியபடி ஆசாரசீலர்களாக ஒழுகுதல்,காலைமாலை வழிபாடுசெய்தல்,அட்டாங்க,பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல்,மேனியில் திருநீற்றின் ஒளிவிளங்கத் தத்தம் கடமைக்கு உயிரூட்டுதல்,திருவைந்தெழுத்தினை உச்சரித்தல்,பஞ்சமா பாதங்களை அறவே ஒழித்தல்,திருமுறைபாடுதல்,தூய வார்த்தை பேசுதல்,அங்கப்பிரதட்சணம் செய்தல்,அடியளித்தல்,பால்காவடி பன்னீர்க்காவடி, புஷ்பக்காவடி,பஜனைக் காவடி ஆகிய சாத்தியமானவற்றில் முருகனைப் பேறாக்குதல், தேரடியில் மௌனமாக இருத்தல்,திருப்புகழ் நற்சிந்தனை பாடுதல்,நாம சங்கீர்த்தனம் கானாம்ருதம் செய்தல், சிவசின்னங்க ளோடு சுற்றுப் பிரகார திருவலம் செய்தல்,கதைக்காது பேசாது இடையூறு செய்யாது வழிபாடு ஆற்றுதல். மற்றும் ஆண்கள் வேட்டியும் அரையில் சால்வையும், பெண்கள் பாதுகாப்பான உடைநடை பாவனையும் அம்பாளின் சொரூபமாகவும் மிளிர்தல். ஆண்கள் அவர்கள் கோடீஸ்வரராக இருந்தாலும் மேலங்கி அணிவது ஆகாது. போர்த்துக்கொண்டு கோயிலுக்குள் பிரவேசிப்பதும் மகாபாவம். ஆகமத்தில் இதுபற்றிச் சொல்லப்பட்டதோ இல்லையோ என்பது ஆய்வுக்குரியது. இருந்தாலும் ஊரோடு ஒத்துவாழ்தல் என்பது ஒரு மரபு. அன்றிலிருந்து இன்றும் என்றும் இனிவருங்காலத்திலும் ஆலயமகோற்சவ பிரதம சிவாச்சாரியார்கள் ஒரே மாதிரி மரபுகள் மீறாதபடி உடைநடை பாவனையில் கந்தபுராண கலாச்சாரத்தை மேன்மையோடு அனுசரிக்கும் போது, எம்மில் பெரும்பாலானவர்கள் ஆலயம் தொடர்பாக அதீத கவனமோடு தூயசிந்தனையோடு ஆகம விதிகளைப் பேணுவது போற்றுவதற்கும், வணங்குவதற்கும் உரியது நல்லூரின் அனைத்து நடவடிக்கைகளும் உலகின் அனைத்து மக்களையும்,பிறமதத்தவர்களையும் கவர்ந்திழுத்துள்ளது. கந்தபுராணக் கலாச்சாரத்தின் உச்சம் நல்லூராகும்.

(நாளை தொடரும்)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.07.2020 இல் வெளியிடப்பெற்றது.